# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2014 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, காலவிதிப்பு (திருத்தச்) சட்டம்

*(2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2014, ஓகத்து மாதம் 08 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

## *2014 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, காலவிதிப்பு (திருத்தச்) சட்டம்*

*[2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச. வ. ஓ. 28/2013*

### *(68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, காலவிதிப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*68 ஆம் அத்தியாயத்தின் 15 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

***2.*** *காலவிதிப்புக் கட்டளைச்சட்டத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-*

*"இக்கட்டளைச் சட்டம் அரச அல்லது திருமணஞ்சார் காரணிகளைப் பாதித்தலாகாது.*

*15. இதன்கண் அடங்கியுள்ள எதுவும் எவ்வகையிலும் -*

*(அ) அரசின் பராதீனப்படுத்தக்கூடிய அல்லது பராதீனப்படுத்த முடியாத உரிமைகளைப் பாதித்தலாகாது ; அல்லது*

*(ஆ) மணநீக்கத்துக்கான ஏதேனும் வழக்கினது எவையேனும் நடவடிக்கைகளுக்கு அல்லது எக்காலப்பகுதியினுள் எவரேனும் பகிரங்க அலுவலருக்கு அல்லது வேறு ஆளுக்கெதிராக வழக்குகள் தொடரப்படலாமோ அந்தக் காலப்பகுதியை ஒழுங்குபடுத்துவதற்காகவும் தீர்மானிப்பதற்காகவும் விசேட ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள அல்லது இதன்பின்னர் செய்யப்படக்கூடிய ஏதேனும் வழக்குக்கு ஏற்புடையதாதலாகாது.".*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***3.*** *இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்